சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

புள்ளி

## நாடகமும் அரங்கியலும்

**தரம் - 10** **முதலாம் தவணைப் பரீட்சை-2016**

சுட்டென் : ……………………..…………

பகுதி - 1

நேரம்
2 மணித்தியாலம்

- **எல்லா வினாக்களிற்கும் விடை தருக.**

01. "DRAMA" என்ற ஆங்கில வார்த்தையின் தமிழ் வடிவம் எது?
    1. கூத்து 2. நாடகம் 3. நடனம் 4. அரங்கம்

02. மேடை நாடகம் ஒன்று இடம் பெறுவதற்கு பின்வருவனவற்றுள் எது மிக அவசியமானது ?
    1. விளம்பரம் 2. இசை 3. நடிகர் 4. ஒலி, ஒளி

03. நாடக அறிக்கை ஒன்றிற்கு நிதி வசதிகளை வழங்குபவர் யார் ?
    1. . நெறியாளர் 2. இசையமைப்பாளர் 3. நாடக ஆசிரியர் 4. தயாரிப்பாளர்

04. நாட்டிய சாஸ்திரம் கூறும் அபிநயங்கள் எத்தனை ?
    1. (6) 2. (4) 3. (3) 4. (5)

05. நாடக எழுத்துருவை (நாடக பாடம்) உருவாக்குபவர் யார்?
    1. நாடகாசிரியர் 2. நெறியாளர் 3. தயாரிப்பாளர் 4. இசையமைப்பாளர்.

06. ஒரு நடிகனுக்கு அத்தியவசியமற்றது ?
    1. அழகான உடம்பு 2. புத்தாக்க நடிப்பு
    3. நெகிழ்வான உடம்பு 4. தெளிவான தொனி அமைப்பு

07. நாட்டிய சாஸ்திரம் என்ற நூலை உருவாக்கியவர் யார்?
    1. அரிஸ்டோட்டில் 2. பரதர் 3. ஆகுஜா 4. தொம்சன்

08. வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்" எனும் நாடகத்தை எழுதியவர்
    1. சி. மௌனகுரு 2. ம. சண்முகலிங்கம் 3. நா. சுந்தரலிங்கம் 4. இ. சிவாதர்தன்

09. வாய்பேசா நாடக வடிவமாக வரக்கூடியது.
    1. ஊமம் 2. பலே 3. ஓபேர 4. கூத்து

10. வானொலி நாடகம் ஒரு
    1. கட்புலக்கலை 2. செவிப்புலக் கலை
    3. கட்புல செவிப்புலக் கலை 4. ஆற்றுகைக் கலை

11. காலத்தால் பழமையான அரங்கு
    1. யப்பான் அரங்கு 2. சமஸ்கிருத அரங்கு
    3. சீன அரங்கு 4. கிரேக்க அரங்கு

12. ஈழத்தில் காமன் கூத்து ஆடப்படும் பிரதேசம்

1. மட்டக்களப்பு 2. மலையகம் 3. மன்னார் 4. யாழ்ப்பாணம்

13. பண்டைய காலத்தில் நாடகம் என்பது எதனைக் குறிக்கும் சொல்

1. நடனம் 2. நாட்டியம் 3. கூத்து 4. ஆடல்

14. பரத முனிவரின் அடிப்படையான ரசங்கள் எனக் கொண்ட எண்ணிக்கை

1. (7) 2. (8) 3. (9) 4. (10)

15. நாடகத்தில் சோக உணர்வை வெளிப்படுத்த பயன்படுத்தப்படும் பிரதான இசை கருவி எது?

1. நாதஸ்வரம் 2. கிட்டார் 3. வீனை 4. வயலின்

16. பின்வருவனவற்றுள் ஆற்றுகைக் கலை எனக் கூற முடியாதது.

1. நடனம் 2. இலக்கியம் 3. இசை 4. நாடகம்

17. இந்து ஐதிக கதை விளக்கங்கள் இல்லாத விழா

1. தீபாவளி 2. தைப்பொங்கள் 3. நவராத்திரி விழா 4. மகாசிவராத்திரி

18. ஒரு நடிகன் தன்னுடைய உடலில் எத்தனை இடங்களிலிருந்து ஒலியை எழுப்புவான்?

1. (5) 2. (3) 3. (4) 4. (6)

19. ஒரு நாடகத்தின் ஒப்பனையின் பயன்பாடு

1. நடிகர் முகத்தை அழகாக வைத்திருக்க
2. நன்கு பேசி நடிப்பதற்கு
3. பாத்திரங்களின் உணர்ச்சியை முனைப்புறுத்திக் காட்டுவதற்கு
4. ஒப்பனை கட்டாயம் என்பதால்

20. நாடக விமர்சனம் என்பது

1. நாடகத்தின் குறை நிறைகளை ஆராய்ந்து ஆக்கபூர்வமாகக் கூறுவது
2. நாடகத்தின் குறைகளை கூறுவது
3. நாடகத்தின் நிறைகளை கூறுவது
4. நாடகத்தை பற்றி எதுவும் கூறாது இருப்பது

(20 x 2 = 40 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

**சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**

**நாடகமும் அரங்கியலும்**

**தரம் - 10** **முதலாம் தவணைப் பரீட்சை-2016**

| புள்ளி |
| --- |
| |

சுட்டென் : ......................................

பகுதி – II

நேரம்
மணித்தியாலம்

**முக்கியம் :**

**(முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.)**

**1.** **சுருக்கமான விடை எழுதுக.**

i. “போலச் செய்தலிலிருந்தே அனைத்துக் கலைகளும் தோற்றம் பெற்றன” என குறிப்பிட்டவர் யார்?

ii. மலையத்தில் ஆடப்படும் பாரம்பரிய கூத்து வடிவம் ஒன்றை குறிப்பிடுக.

iii. “ஆரொடுநோகேன்” எனும் நாடகம் யாரால் எழுதப்பட்டது?

iv. நாடகக் கலை வடிவம் எதில் இருந்து தோன்றியது?

v. வானொலி நாடகத்தின் பிரதான பண்பகள் இரண்டை குறிப்பிடுக.

vi. அரங்கின் அடிப்படை மூலகங்கள் இரண்டை குறிப்பிடுக.

(2 x 6 = 12 புள்ளிகள்)

2. i. உமக்கு தெரிந்த சிறுவர் நாடகங்கள் 04 குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

ii. சிறுவர் நாடகத்திற்குரிய பண்புகள் 04 குறிப்பிடுக. (8 புள்ளிகள்)

3. i நால்வகை சித்தரிப்புக்களை (அபிநயம் ) குறிப்பிடுக.

ii. நால்வகை சித்தரிப்புகளையும் சுருக்கமாக விளக்குக. (8 புள்ளிகள்)

4/ i. உமக்கு தெரிந்த அரங்க விளையாட்டுக்கள் நான்கை குறிப்பிடுக. ( 4 புள்ளிகள்)

ii. நாடகம் ஒன்றை பயில்வதற்கு அரங்க விளையாட்டுக்கள் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தனவாக உள்ளனவென விளக்கு.?

(8 புள்ளிகள்)

5. i. நாடகத்தின் பிரதான பண்புகள் நான்கை குறிப்பிடுக (4புள்ளிகள்)

ii நாடகம் ஏனைய கலைகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது,

(8 புள்ளிகள்)

6. விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. நாடக ஆசிரியர், தயாரிப்பாளர், நெறியாளர், பார்வையாளர், நடிகர், ஆகியோரின் பணிகளை தருக?

(6 x 2=12 புள்ளிகள்)